www.Padasalai.Net www.TrbTnpsc.com

08 MAY 2025

சுருக்கம்

பள்ளிக்கல்வி – அரசு பொதுத் தேர்வுகள் - இனிவரும் கல்வியாண்டு முதல் மேல்நிலைத் தேர்வு முடிவுகளுக்கு பிறகு மாணவர்கள் விண்ணப்பிக்கும் நேரடி மறுகூட்டல் (மறுகூட்டல் I) முறையினை இரத்து செய்தல் மற்றும் மாணவர்கள் விடைத்தாள் நகல் பெற்ற பின்னர் மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் முறை நடைமுறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித் (அதே) துறை

அரசாணை (நிலை) எண்.103 நாள். 07.05.2025

திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு வருடம், சித்திரை 24

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.1925, கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் (வி1) துறை, நாள் 30.08.1982.
2. அரசாணை (பல்வகை) எண்.8, பள்ளிக்கல்வித் (வி1) துறை, நாள் 17.01.2001.
3. அரசாணை (நிலை) எண்.111, பள்ளிக்கல்வித் (வி1) துறை, நாள் 18.05.2009.
4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.4518/எச்1/2025, நாள் 09.04.2025.

------------

ஆணை :-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசுத் தேர்வுத்துறையால் நடத்தப்படும் எஸ்.எஸ்.எல்.சி மற்றும் மேல்நிலைப் பள்ளி இறுதித் தேர்வுகளில் அந்நாளில் இருந்த நடைமுறைப்படி விடைத்தாள்கள் மறுபரிசீலனையை மேற்கொள்ளாமல், மதிப்பெண் மறுகூட்டல் மட்டும் எவ்விதக் கட்டணமுமின்றி இருப்பதைத் தொடரலாம் என ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாணாக்கர்களின் நலன் கருதி மேல்நிலைத் தேர்வுகளில் கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய நான்கு (4) பாடங்களின் தேர்வுகளுக்கான விடைத்தாள்களை மட்டும் மாணவ/ மாணவிகள் விரும்பினால் ஜெராக்ஸ் நகல் எடுத்து காண்பிக்கவும். தேவைப்படின் மறுமதிப்பீடு செய்யவும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

(த.பி.பா)

www.Padasalai.Net

NP

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலைத் தேர்வு எழுதிய மாணவர்களுக்கு கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் கணினி அறிவியல் ஆகிய பாடங்களுக்கான விடைத்தாள்களின் அச்சுப்பகர்ப்பு நகல் மற்றும் மறுமதிப்பீடு செய்யும் முறையை பிற பாடங்களுக்கான விடைத்தாள்கள் அனைத்திற்கும் நீட்டித்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இனிவரும் கல்வியாண்டுகளில், மேல்நிலைத் தேர்வு முடிவுகளுக்கு பிறகு நேரடி மறுகூட்டலுக்கு (மறுகூட்டல் I) விண்ணப்பிக்கும் முறையினை இரத்து செய்யுமாறும், தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர், தேர்வர்கள் தங்களது மதிப்பெண்களில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் பொருட்டு முதலில் தங்களது விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்து, விடைத்தாள் நகல் பெற்ற பின்னர், மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீடு கோரி விண்ணப்பிக்கும் நடைமுறையை செயல்படுத்தவும் ஆணை வழங்குமாறு அரசுத் தேர்வுகள் இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் மேற்காண் கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, மேல்நிலைத் தேர்வு முடிவுகளுக்கு பிறகு நேரடி மறுகூட்டலுக்கு (மறுகூட்டல் I) விண்ணப்பிக்கும் முறையினை இரத்து செய்தும், இனிவரும் கல்வியாண்டுகளில், தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர், தேர்வர்கள் தங்களது மதிப்பெண்களில் ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்துக் கொள்ளும் பொருட்டு, முதலில் தங்களது விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்து, விடைத்தாள் நகல் பெற்ற பின்னர், மறுகூட்டல் அல்லது மறுமதிப்பீடு கோரி விண்ணப்பிக்க வேண்டும் என்ற நடைமுறையினை செயல்படுத்த அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சந்தர மோகன்.B
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-600 006.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.
தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை-600 006.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 035.
மாநிலக் கணக்காயர், சென்னை – 600 018/600 035.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**நகல்:-**
பள்ளிக்கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை -600 009.
அரசு முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
பள்ளிக்கல்வித் துறை, சென்னை-600 009.
பள்ளிக் கல்வித் (அநமு) துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 7/5/2025

அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை - 600 006.

மேற்குறிப்பு

ந.க.எண். 100603/அ1/2025 நாள். 08.05.2025

அரசாணை (நிலை) எண். 103, பள்ளிக் கல்வித் (அ.க) துறை, நாள். 07.05.2025-ன் நகல் தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும் வழங்கப்படுகிறது.

இணை இயக்குநர் (மேல்நிலை) 8/5/25

பெறுநர்:
1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள்
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
4. சம்பந்தப்பட்ட பிரிவுகள்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com